# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# நெகேமியாவின் பெரிய அலங்கம்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

பெர்சியா, ஒரு வலிமை மிகுந்த தேசம், உலகத்தை ஆட்சி செய்தது. ராஜாவாகிய அர்தசஷ்டா பெர்சியாவை ஆண்டு வந்தான். அது அவனை உலகின் வல்லமை மிக்க ராஜாவாக ஏற்படுத்தியது.



ராஜாவின் மிக முக்கியமான உதவியாளர்களின் ஒருவனுடைய பெயர் நெகேமியா.  அவன் யூதனாக இருந்தான்.  அவனுடைய வேலை என்னவென்றால் ராஜாவின் போஜனங்கள் விஷமில்லாதவைகளா என்று ருசித்து மற்றும் சோதித்து ராஜாவை பாதுகாக்க வேண்டியதாகும்.



ஒரு நாள் துக்கமான முகத்துடன் நெகேமியா ராஜாவின் முன்பாக வந்தான். என்ன தவறு என்று அறிய ராஜா முற்பட்டான். "ஓ ராஜாவே! நீர் என்றென்றும் வாழ்வீராக," என்று நெகேமியா சொன்னான்.



"நான் துக்கமாக இருப்பதின் காரணமென்ன வென்றால் என்னுடைய முன்னோர்கள் அடக்கம் பண்ணைப்பட்டிருக்கிற பட்டணம் இடிந்து அதின் வாசல்கள் தீக்கிரையாக்கப்பட்டு இருக்கிறது," பல வருடங்களுக்கு முன்னால் போரினால் அழிக்கப்பட்ட எருசலேமை குறித்து, நெகேமியா பேசிக்கொண்டிருந்தான்.



"உனக்கு என்ன வேண்டும்?" என்று அர்தசஷ்ட ராஜா கேட்டான். "நான் எருசலேமுக்கு திரும்ப போய், நான் அதை திரும்ப கட்டவேண்டும்," நெகேமியா கெஞ்சிகேட்டான்.



அர்தசஷ்டா அதற்கு சம்மதித்ததுமல்லாமல், நெகேமியா பிரயாணம் பண்ணிபோகும் போது பாதுகாக்கப்பட அதிகார பூர்வமான கடிதங்களையும் கொடுத்தான்.



இதற்கும் அதிகமாக ராஜா அவனுக்கு உதவி செய்தான். ராஜாவின் வனப்பகுதியை பாதுகாக்கிற, ஆசாப்புக்கும், நெகேமியாவினிடத்தில் ஒரு கடிதம் கொடுத்தான். பட்டணத்தின் அலங்கத்தை கட்ட நெகேமியா கேட்கும் மரங்களை கொடுக்கும்படி ஆசாபுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.



நெகேமியா எருசலேமுக்கு வந்து சேர்ந்தபோது, அவன் பட்டணத்தின் அதிகாரிகளை கூட்டிச்சொன்னது, "நாம் இங்கே இக்கட்டில் இருக்கிறோம். பட்டணமானது இடிந்துகிடக்கிறது, மற்றும் வாசல்கள் எரிந்து கிடக்கின்றன. நாம் எழுந்து கட்டுவோம்."



அர்தஷ்டா ராஜா இதற்கு சம்மதித்திருந்தான். மற்றும் மிக முக்கியமாக தேவன் நம்முடைய பக்கமிருக்கிறார் என்று அவர்களிடத்தில் சொன்னான்.



நெகேமியாவின் நம்பிக்கையும், ஆர்வமும் ஜனங்களை உற்சாகப்படுத்தியிருக்கலாம். அவர்கள் சம்மதித்து, சொன்னது, "நாம் திரும்ப கட்டுவோம்," நெகேமியா ஒவ்வொரு குடும்பமும் எந்தப் பகுதியின் அலங்கத்தை கட்டவேண்டுமென சொல்லியிருந்தான்.



ஆனால், அலங்கத்தை திரும்ப கட்ட
எல்லோரும் சம்மதிக்கவில்லை.



சன்பல்லாத் என்ற பேர்கொண்ட மனிதனும், அவனுடைய இரண்டு நண்பர்களான தொபியா, கேஷம் என்றவர்கள் அவர்கள் அலங்கம் திரும்ப கட்டப்படுவதையும்,



வாசல்கள் புதுபிக்கப்படுவதையும் விரும்பவில்லை.

வேலைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க, சன்பல்லாத் மிகவும் கோபமடைந்தான். அவனும், அவனுடைய நண்பர்களும் யூதர்களை கிண்டல் பண்ணினார்கள். தொபியா சொன்னான், "அவர்கள் அந்த பலகீனமான அலங்கத்தை கட்டி முடித்தபின், ஒரு நரி அதின் மேல் ஏறிச்சென்றாலும்



அவைகள் உடைந்துபோகும்."

நெகேமியா அவனுக்கு பதிற்சொல்லவில்லை, மாறாக தேவன் அவர்களை சந்திக்க வேண்டுமென அவன் விண்ணப்பம் பண்ணினான்.




அவர்களுடைய கேலி மற்றும் அவமானத்திற்கு எந்த விளைவும்
இல்லை என்று தெரிந்த போது, அவர்கள் எருசலேமுக்கு எதிராக
சண்டையிட திட்டம் தீட்டினார்கள்.
அவர்கள் எவ்வளவு கஷ்டம்
கொடுக்கமுடியுமோ அவ்வளவு
கஷ்டம் கொடுக்க
நினைத்தார்கள்.

திரும்பவுமாக, தேவனிடம் உதவிக்காக வேண்டுதல் பண்ணினான். அவர்கள் அறியாத வேளையில் எதிரிகள் வரக்கூடாது என்று பாதுகாப்புக்காக இரவும், பகலும் காவலர்களை நிறுத்தினான்.



யூதர்கள் மிக கடினமாக வேலை செய்ததினாலே. அவர்கள் மிகவும் களைப்படைந்தார்கள். சிலர் ஒரு வேளை பகைஞர்கள் வந்து தாங்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போது, கொலை செய்து விடுவார்களோ என்று பயந்தார்கள், ஆனால் நெகேமியாவோ தன்னுடைய திட்டத்தை நிறுத்தவில்லை.



நம்முடைய பக்கத்திலே தேவன்
இருக்கிறார் மற்றும் நம்முடைய
பகைஞர்களைவிட தேவன்
வல்லமையுள்ளவர்
என்று ஞாபகப்படுத்தி
கட்டுகிறவர்களை
சுற்றிலும்
காவலர்களை
நிறுத்தினான்!





நெகேமியா
அவர்களுக்கு
முன்பாக ஒரு மாதி
ரியாக இருக்க
முயற்சித்தான்.



அர்தசஷ்டா ராஜா
அவனை எருசலேமுக்கு
ஆளுநராக நியமித்து,
மக்களிடமிருந்து
உணவும், பணமும்
பெற்றுக் கொள்ளக்கூடிய
அதிகாரத்தையும்
கொடுத்திருந்தான். ஆனால்
அவனோ அப்படி
செய்யவில்லை.



அவன் கடினமாக வேலை செய்து, அலங்கத்தை திரும்பக் கட்டுகிற ஜனங்களுடன் இணையாக இருந்தான். உணவைப் பெற தன்னுடைய சொந்த பணத்தை உபயோகித்தான்.

கடைசியாக, ஜனங்கள் அலங்கத்தை கட்டி முடித்தார்கள், மற்றும் பிரதானமான வாசல்களில் கதவுகள் மாத்திரம் போடப்பட வேண்டியிருந்தது. சன்பல்லாத்தும், தொபியாவும் மற்றும் கேசமும் அலங்கத்தில் இப்போது இனி எந்த இடைவெளியும் இல்லை என்று கேள்விப்பட்டபோது, அவர்கள் நெகேமியாவிற்கு தீங்கு விளைவிக்க திட்டம் பண்ணினார்கள்.



ஒனோ என்ற இடத்திலே தங்களை சந்திக்க வரும்படி நெகேமியாவுக்கு அவர்கள் செய்தி அனுப்பினார்கள். அவர்கள் தனக்கு தீங்கு விளைவித்து பட்டணத்திலிருந்து தந்திரமாக வெளியே அனுப்பப்பார்க்கிறார்கள் என்று நெகேமியா அறிந்து கொண்டான். வேலையை விட்டுவிட்டு அவர்களை பார்க்க வரமுடியாதென அவர்களுக்கு பதில் மொழியாக கடிதத்தை அனுப்பினான்.



கடைசியாக
அலங்கமானது
கட்டிமுடிக்கப்பட்டது,
நெகேமியா



அவைகளை பாதுகாக்கும்படி
காவலர்களை
நிறுத்தினான்.



சூரியன் உதிக்கும்
வரை கதவுகள்
திறக்கப்படக்

கூடாதென்று
அவன் சட்டம்
போட்டிருந்தான்.

இராத்திரி
முழுவதும்,



அவைகள்
அடைக்கப்பட்டு மற்றும்
தடுக்கப்பட்டிருந்தன.

இப்போது பட்டணமானது பாதுகாப்பாக இருந்ததினாலே, சிறையிருப்பிலிருந்த அநேக யூதர்கள் உலகத்தின் பல பாகங்களிலிலிலுமிருந்து எருசலேமுக்கு திரும்பினார்கள்.



பல தடைகளுக்கு மத்தியிலும், தேவன் தனக்கு கொடுத்த வேலையை முடித்துவிட்டதற்காக நெகேமியா மிகுந்த சந்தோஷமடைந்தான். அவன் எருசலேமிலே தொடர்ந்து தங்கியிருந்து, ஜனங்கள் எப்போதும் தேவனுக்கு கீழ்ப்படிய உதவிசெய்தான்.



நெகேமியாவின் பெரிய அலங்கம்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

நெகேமியா

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16